# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் நடைபெற்ற

# இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் காட்சிகள்!







சென்னை அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் 15.02.2025 அன்று மாலை – கழக இளைஞர் அணி சார்பில் இளம் பேச்சாளர்களுக்கான இரண்டுநாள் பயிற்சி முகாமின் முதல்நாள் நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக 'சொல் அல்ல செயல்' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றிய கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா, இளம் பேச்சாளர்களுக்கு கொள்கை உரமூட்டினார். முத்தமிழறிஞர் கலைஞர் நமக்கு வழங்கிய ஐம்பெரும் முழக்கங்களை, நிகழ்வின் இறுதியில் இளம் பேச்சாளர்களை உரக்க முழங்கச் செய்தார்.





இளம்பேச்சாளர்களுக்கான இரண்டுநாள் பயிற்சி முகாமில், இன்றைய சமூகவலைத்தள காலத்தில் பேச்சாளர்கள் எப்படி நகைச்சுவை எனும் கலையை வளர்த்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று U2Brutus மைனர் – வீரமணி, ஸ்ரீவித்யா ஆகியோர் சுவை கலந்த பேச்சால் மிகச் சிறப்பாக விளக்கினார்கள்.





நகைச்சுவையின் மூலம் கூரிய அரசியல் விமர்சனங்களை முன்வைக்கும் – பிரகதீஸ்வரன் உள்ளிட்ட 'புதுகை பூபாளம்' கலைக்குழுவினர், கழக இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமில், தங்களுக்கே உரிய பாணியில் பகுத்தறிவு, சமூகநீதி, மதவாத எதிர்ப்புக் கருத்துகளை மிகச்சிறப்பாக முன்வைத்தனர்.






கழக இளைஞர் அணி சார்பில், இளம் பேச்சாளர்களுக்கு நடத்தப்பட்ட இரண்டுநாள் பயிற்சி முகாமில், பெரியார், அண்ணா, கலைஞர் எழுத்துகளின் சிறப்புகள் குறித்தும், சமூகவலைத்தளங்களில் எழுதுவதன் அவசியம் குறித்தும் எழுதி வளர்ந்த இயக்கம் எனும் தலைப்பில் எழுத்துப் பயிற்சி குறித்து டான் அசோக் சிறப்பாக விளக்கினார்.